1997 மார்ச் 24]

முற்பகல் 9-40

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாலிப்டினம் என்பது என்னவென்று எல்லோருக்கும் தெரியாமல் இருக்கும்போதே இந்த அரசு அங்கே தொழிற்சாலையை உருவாக்க முனையும்போது, அதற்கான ஆய்வுகள் நடத்திக் கொண்டிருக்கும்போது, மற்ற தொழிற்சாலைகளை நிறுவுவதற்குத் தயங்காது என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி. கே. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாலிப்டினம் தொழிற்சாலையைத் துவங்குவது வரவேற்கக்கூடியது. அதற்காக மாவட்ட மக்களின் சார்பிலே மனதார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில், அந்தத் தொழிற்சாலையை அதிக அளவு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய வகையிலே மிகப்பெரிய தொழிற்சாலையாக நிறுவ ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுகள் முடிவுற்ற பிறகு ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 303, திரு. வி. பி. இராசன், திரு. ஆ.மு. முனிரத்தினம், திரு. கே. மணிவர்மா மற்றும் திரு. செ. இராமலிங்கம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

303—

கோயில்களுக்கு இலவச மின்சாரம்

***1788—திரு. வி.பி. இராசன்:**
திரு. ஆ.மு. முனிரத்தினம்:
திரு. கே. மணிவர்மா:
திரு. செ. இராமலிங்கம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 மார்ச் 24

வருமானம் இல்லாத கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி.பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லையென்று சொல்லுவதில்லை' என்று சொல்வார்கள். அதுபோல, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கையேந்துகிறோம். வருமானம் இல்லாத கோயில்களுக்கு விளக்கேற்றி வைத்த பெருமை உங்களுக்குச் சேரும். குடிசைகளுக்கு வழங்குவதுபோல ஒரு விளக்காவது கோயில்களுக்கு வழங்கும் முயற்சியில் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறைவனிடம் கையேந்துங்கள் என்று சொல்வது போல, என்னிடம் கையேந்துவதாக உறுப்பினர் குறிப்பிட்டார். இப்போது, ஏற்கெனவே தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 20 இலட்சம் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் தருகிறோம். ஆலயங்களுக்கும் இலவச மின்சாரம் கொடுத்தால், பிறகு வாரியத்தை ஆண்டவனால் கூடக் காப்பாற்ற முடியாது.

திரு. கே. மணிவர்மா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராமத்திலும் பழமையான கோயில்கள் ஒன்றிரண்டுதான் இருக்கின்றன. அவை அனைத்தும் இருண்டு கிடக்கின்றன. மின்சார இணைப்புகள் இருந்தும், மின் கட்டணம் செலுத்த முடியாமல் இருண்டு கிடக்கின்றன. எனவே, மின்சாரக் கட்டணத்தை ரத்துசெய்து, அந்தக் கோயில்கள் ஒளி பெறுவதற்கும், கிராமங்களிலே இருக்கிற மக்கள் வாழ்வில் வளம் பெறுவதற்கும், ஆன்மீகத்தில் இருக்கிறவர்கள் எல்லாம் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் ஆண்டவனைத் தரிசித்து அவர்கள் பயன்பெறுவதற்கும் இந்த அரசு, கோயில்களுக்கு மின் கட்டணத்தை ரத்து செய்து, இலவச மின்சாரம் வழங்குவதோடு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடவுளுக்கும் கருணையுள்ளத்தோடு கிராமப்புறங்களிலே சீர்கெட்டுக் கிடக்கின்ற கோயில்களுக்குத் திருப்பணி செய்ய ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1997 மார்ச் 24]

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயத்திலே உள்ள ஆண்டவனுடைய தலையைச் சுற்றியே ஒளி வட்டம் இருக்கிற காரணத்தால் இந்த ஒளி தேவையில்லை என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு)

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்த பல்வேறு பிரிவினர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்—நலிவடைந்த, வருவாய் குன்றிய கோயில்களுக்கு தற்போது மின் கட்டணம் 'கமர்ஷியல் டேரிப்' அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. அதையாவது மாற்றி, டொமஸ்டிக் சர்வீஸ்களுக்கு வசூலிக்கிற அளவு, சிங்கிள் டாரிப்-ஆக வசூலிக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களைப் பொறுத்தவரையில், எல்லா ஆலயங்களுக்கும் கமர்சியல் டாரிப் வசூலிப்பது இல்லை, ஆலயங்களுக்கு, டாரிப்-7-ன் கீழ் மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்து வருகிறோம். ஆனால், ஆலயங்களைச் சுற்றிக் கடைகள் கட்டியிருப்பார்களேயானால் அந்தக் கடைகளுக்குப் டாரிப்-9-ன் கீழ் மின் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. எனவே, ஆலயங்களைப் பொறுத்தவரையில், விளக்குகள் போட்டு அங்கே மின்சாரத்தைப் பயன்படுத்தினால் டாரிப் 7-ன் கீழ் தான் மின் கட்டணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 304, திரு. சி.டி. தண்டபாணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

304—

தனியார் துறையில் மின் நிலையம் துவங்குதல்

***4080—திரு. சி.டி. தண்டபாணி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் தனியார் துறையில் மின் நிலையம் துவங்க அனுமதி கோரப்பட்டுள்ளதா?